யாத்ரீகர்கள் வரி விதிப்பு.

* 771 வினா :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

ரயில்வேக்கள் வாங்கும் "பில்கிரிம்" வரி (Pilgrim Tax)-லிருந்து தமிழ்நாடு அரசுக்கு அல்லது குறிப்பிட்ட பகுதிகளுக்கு எத்தனை சதவீதம் திருப்பித் தரப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : யாத்திரீகர்கள் வரி விதிப்புத் தொகையிலிருந்து அரசாங்கக் கணக்கிற்குப் பிரித்துக் கொடுக்கப்படுவதில்லை. வசூல் செலவுக்காக 3 சதவீதம் (தனிச் சீட்டாக இருந்தால் 5 சதவீதம்) கழித்ததது போக வசூல் தொகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இருப்புப்பாதை அதிகாரிக் குழுவினரால் கொடுக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த ரயில்வேத் துறையினரால் வசூலிக்கப்படும் பில்கிரிம் வரியை குறிப்பிட்ட அந்த உள்ளாட்சிக்கோ அல்லது தமிழ்நாடு அரசாங்கத்திற்கோ முழுவதுமாகச் செலுத்த வேண்டுமென்று கோரி நமது அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்த நகராட்சிகளில் அல்லது ஊராட்சிகளில் யாத்திரீகர்கள் வரி விதிக்க அனுமதிக்கிறோமோ, அந்தப்பொறுப்பை அந்தப் இடத்திலுள்ள ரயில்வே நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்கிறார்கள். வசூலிப்பதில் 3 சதவிகிதம் (தனி சீட்டாக இருந்தால் 5 சதவிகிதம்) அவர்கள் செலவுக்காக எடுத்துக் கொண்டு மீதித் தொகையை சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கோ, அல்லது ஊராட்சிகளுக்கோ கொடுத்துவிடுகின்றனர். இந்த முறைதான் எங்கும் இருக்கிறது. முழுத் தொகையையும் கொடுப்பது கிடையாது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்த யாத்திரீகர்கள் வரி எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரிய திருவிழாக்கள் நடைபெறுவதன் காரணமாகவோ, அல்லது வேறு காரணங்களாலோ அதிகமாக மக்கள் அடிக்கடி பார்வையிட வருகின்ற இடங்களில் இந்த யாத்திரீகர்கள் வரி வசூலிக்கப்படுகிறது. அதிகமாக மக்கள் வருவதால், அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதில் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அந்தச் செலவை ஈடுகட்டும் வகையில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அல்லது நகராட்சிகள் இந்த யாத்திரீகர்கள் வரியை வசூலிக்கின்றார்கள்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, இந்த யாத்திரீகர்கள் வரி ரயில்வே நிர்வாகத்தினர் மூலமாக வசூலிக்கப்படுவதால், ரயிலில் வருகின்றவர்களிடம் தான் வசூல் செய்ய முடியும். திருவிழாக்கள் நடைபெறுகின்றபோது பெருந்திரளான மக்கள் கூட்டம் வருவதால் அவர்

களுக்குச் செய்யப்படுகின்ற மற்ற வசதிகளோடு, சுகாதார வசதியும் செய்ய வேண்டியிருக்கிறது. பஸ்களிலும் அந்த இடங்களுக்கு ஏராளமான மக்கள் வருகிறார்கள். ஆகவே, ரயில் மூலம் வருகிறவர்களிடம் யாத்திரீகர்கள் வரி வசூலிப்பதுபோல் பஸ்களில் வருகின்றவர்களிடமும் வசூலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ரயில்வே நிர்வாகத்தினர் டிக்கட்டோடு சேர்த்து வசூலித்துவிடுவதால் சுலபமாக இருக்கிறது. அவர்கள் திருவிழா நடைபெறுகின்ற காலங்களில் மட்டுமல்லாமல் எல்லாச் சமயங்களிலும் வசூலிக்கிறார்கள். அது சுலபமாகவும் இருக்கிறது. பஸ்களில் வருகின்றவர்களிடம் வசூலிப்பது கடினமானது. அதோடு பல தொல்லைகளும் ஏற்படும்.

நகராட்சி மன்றங்கள்

*772 வினா:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நகராட்சி மன்றங்களின் இரட்டை மெம்பர் வார்டுகளை ஒற்றை மெம்பர் வார்டுகளாக மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய கல்லூரிகள்

*773 வினா:—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவை நகரில் அரசுத் தரப்பில் ஓர் கலைக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொதுமக்களிடமிருந்து, ஐந்து இலட்ச ரூபாய் நன்கொடை கிடைத்து, இடவசதியும் செய்யப்பட்டால் புதுக் கல்லூரி ஒன்று கோவையில் திறக்கப்படலாம்.

*774 வினா:—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பல்லடம் நகரத்தில் கல்லூரி ஒன்று திறந்து நடத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.